# எல்லோருக்கும் எல்லாம்

சு.விஜயபாஸ்கர் 43

**அநீதிக்கு எதிரான நீதியின் குரல்! அதன் சட்ட வடிவமாம் இட ஒதுக்கீடு குறித்த வரலாற்றைப் பேசும் எல்லோருக்கும் எல்லாம்!**



# சட்டமாக மாறிய பிக்காவோல் திட்டம்!

1916-இல் வெளிவந்த ‘பார்ப்பனரல்லாதார் கொள்கை அறிக்கை’, அதன்பின்னர் உருவான தென்னிந்திய நலவுரிமைச் சங்கம் ஆகியவற்றைத் தொடர்ந்து சென்னை மாகாணம் முழுவதும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தின் மாநாடுகளும் செயல்பாடுகளும் வேகமெடுத்தன. பார்ப்பனரல்லாத வகுப்பினரின் இடஒதுக்கீட்டுக் கொள்கையைக் கட்டமைப்பதில், இம்மாநாடுகள் முக்கியப் பங்காற்றின. கோயம்புத்தூரில் நடைபெற்ற முதல் மாநாட்டை அடுத்து, இரண்டாவது மாநாடு இன்றைய ஆந்திர மாநிலத்தின் கிழக்கு கோதாவரி மாவட்டத்தில் உள்ள பிக்காவோல் எனும் ஊரில் 27.10.1917 மற்றும் 28.10.1917 ஆகிய இரு தேதிகளில் நடைபெற்றது.

## பிக்காவோல் பார்ப்பனரல்லாதார் மாநாடு

கோதாவரி மாவட்ட பார்ப்பனரல்லாத இயக்கப் பிரதிநிதிகளும், சென்னை மாகாணத்தின் மற்ற மாவட்டங்களில் இருந்து பெரும் அளவில் பார்ப்பனரல்லாத இயக்கத் தலைவர்களும் பிரதிநிதிகளும், இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர். குறிப்பாக, தியாகராயர், கே.வி.ரெட்டி நாயுடு, பனகல் அரசர் ராமராய நிங்கார், ஏ.பி.பாத்ரோ, எத்திராஜ் முதலியார் உள்ளிட்ட பார்ப்பனரல்லாத இயக்கத்தின் முக்கியத் தலைவர்களும் கலந்துகொண்டனர். டாக்டர் டி.எம்.நாயர் உள்ளிட்டோர் வாழ்த்துக் கடிதங்கள் அனுப்பியிருந்தனர். பார்ப்பனரல்லாத மக்களுக்குப் பொது மன்றங்களிலும், பொதுப் பணிகளிலும் போதிய அளவு பிரதிநிதித்துவம் பெறுதல் உள்ளிட்ட மாநாட்டுச் செயல்திட்டங்கள் வெற்றிபெற வாழ்த்தி, டி.எம்.நாயர் கடிதம் எழுதியிருந்தார்.

வரவேற்புக் குழுத் தலைவர் எம். வெங்கட்ரத்னம் நாயுடு ஆற்றிய வரவேற்புரையில், ‘‘சென்னை மாகாணத்தின் மொத்த மக்கள்தொகையான 4.2 கோடியில் 3.8 கோடி அளவில் பஞ்சமர், பிற்படுத்தப்பட்ட மக்கள் என்ற நிலையில் இருக்கிறார்கள், ஒரு ஜாதிக்கும் மற்றொரு ஜாதிக்கும் இடையே ஒற்றுமையின்மையும், வெறுப்பும் நிலவும்போது பல கோடி மக்களின் நலன்களை, ஒரு சில உயர்ஜாதி மக்களிடம் ஒப்படைக்க இயலுமா?” உள்ளிட்ட கேள்விகளை எழுப்பி உணர்ச்சியூட்டினார். பல்வேறுபட்ட சமூகங்களை ஒருங்கிணைத்து முன்னேறச் செய்யவேண்டுமெனில், அரசிடமிருந்து பெறும் அனைத்துச் சலுகைகளையும், பதவிகளையும் அனைத்துச் சமூகங்களிடையே சமமாகப் பிரித்தளிக்க வேண்டும் என்றும் வரவேற்புரையில் அவர் வலியுறுத்தினார்.

மாநாட்டுக்குத் தலைமையேற்ற காட்ரவுலப்பள்ளி ஜமீன்தார், பார்ப்பனரல்லாத மக்களின் வரலாறு, பார்ப்பனரல்லாத மக்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள், நடைபெற வேண்டிய அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள், ஜாதிவாரி பிரதிநிதித்துவத்தின் தேவை, தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றம் ஆகியவற்றை விளக்கிப் பேசினார். மாநாட்டின் இரண்டாம் நாள் (28.10.1917) பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றில் வகுப்புரிமை தொடர்பான தீர்மானங்கள் மட்டும் கீழே.

## வரலாற்றுத் தீர்மானங்கள்!

நாட்டின் முதன்மையான தேவை தொடக்கக் கல்வி. பொதுமக்களுக்குக் கல்வி அறிவு அளிப்பதற்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் போதுமானவையாக இல்லை. எனவே அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும் இலவச கட்டாயத் தொடக்கக் கல்வியை நடைமுறைப்படுத்த வேண்டும், அதற்கான செலவில் மூன்றில் இரண்டு பங்குக்கும் குறையாமல் அரசே ஏற்றுக்கொள்ளவேண்டும்.

● ஏழை பார்ப்பனரல்லாத மாணவ, மாணவிகளுக்குப் படிப்புதவி வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும். பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குத் தங்கும் விடுதி அமைக்கவேண்டும்.

● பார்ப்பனரல்லாத இயக்கத்திற்கு ஆதரவாக உள்ள ஜமீன்தார்களும், வசதி படைத்த பிரமுகர்களும் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்குத் தங்கும் விடுதிகள் தொடங்கவும், படிப்புதவி அளிக்கவும் தாராளமாக நிதி உதவி செய்யவேண்டும்.

● கிராமப்புறங்களிலும் நகர்ப்புறங்களிலும் கூடுதலாக, பெண்களுக்கு தனிப்பள்ளிகளைத் திறக்கவேண்டும்.

● ஒவ்வொரு மாவட்டத்திலும் அனைத்துச் சமூகத்தினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் அளித்துத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட ஒரு கல்விக் கழகம் அமைக்கவேண்டும்

● அனைத்துச் சமூகங்களைத் சேர்ந்தவர்களுக்கும் அவர்களின் நலன்களைப் பேணுவதற்காகப் பிரதிநிதித்துவம் அளிக்கும் வகையில் சென்னை மாகாண சட்டமன்றத்தின் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும்.

**பல தீர்மானங்கள் செயலுக்கும் வந்தன. சென்னை மாகாணச் சட்டமன்றத் தொகுதிகளைப் பிரித்தளித்த இத்தீர்மானம் ‘பிக்காவோல் திட்டம்’ என்று அழைக்கப்பட்டது.**

● பல்வேறுபட்ட சமூகங்களின் மக்கள் தொகை, அவர்கள் செலுத்தும் சராசரி வரி, அவர்கள் சொந்தமாகப் பெற்றிருக்கும் சொத்துக்களின் அளவு போன்றவற்றைக் கருத்தில் கொண்டும் இன்று அதிகாரமும் செல்வாக்கும் ஒரே சமூகத்திடம் குவிக்கப்பட்டிருக்கின்றன என்பதைக் கருத்தில் கொண்டும் பெரும்பான்மையினராக உள்ள பார்ப்பனரல்லாத சமூகங்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளிக்கவேண்டும்.

● மாகாண சட்டமன்றத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 125-ஆக நிர்ணயிக்கப்பட்டு, அவற்றில் 70 இடங்களைத் தேர்தல் மூலம் நிரப்பவேண்டும். அவற்றைப் பொதுப்போட்டித் தொகுதிகள் (15), பார்ப்பனரல்லாத இந்துக்கள் (26), இஸ்லாமியர் (15), இந்தியக் கிறித்தவர் (5), பார்ப்பனர்கள் (7), ஆங்கிலோ இந்தியர் (2) என்ற விகிதத்தில் ஒதுக்கவேண்டும். 37 இடங்களை நியமனங்கள் மூலம் நிரப்பவேண்டும். அவற்றில் 5 இடங்களை தாழ்த்தப்பட்டோருக்கு ஒதுக்கவேண்டும். மீதமுள்ள 32 இடங்களில் அரசு அதிகாரிகளும் கலைஞர்களும் நியமிக்கப் படுவர். 18 இடங்களை சிறப்பு இடங்களாகக் கருதி, ஜமீன்தார்கள் (5), வியாபாரிகள் (5), ஐரோப்பியர் (6), சென்னைப் பல்கலைக்கழகம் (2) என்று பிரித்தளிக்கவேண்டும்.

● ஒரு பணியிடத்திற்குத் தகுதியுள்ள பல்வேறு பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் இருக்கும் போது, இப்பணியில் பிரதிநிதித்துவம் இல்லாத சமூகத்தைச் சேர்ந்தவருக்கு அந்த இடத்தைத் தரவேண்டும்.

● மற்ற சமூகங்களில் சுமாரான தகுதி பெற்றவர்கள் எவரும் இல்லை என்னும் நிலையைப் பெற்றுள்ள பணியிடங்களைத் தவிர, மற்ற எந்த ஒரு பணியிலும், ஒரு சமூகத்தின் மக்கள்தொகைக்கு ஏற்ற விகிதாசாரத்துக்கும் அதிகமான பணியிடங்களுக்கு அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு நியமனம் அளிக்கக்கூடாது.

● பொதுப்பணிகளில் பல்வேறு சமூகத்தினரிடையே நிலவும் சமமின்மையைச் சரி செய்வதற்காக ஒரு குறிப்பிட்ட அளவு, உதவி மாஜிஸ்டிரேட்டு, உதவி ஆட்சியர் பணியிடங்களில், இவற்றில் போதிய அளவு பிரதிநிதித்துவம் பெற்றிராத சமூகத்தினரை நேரடியாக நியமிக்கவேண்டும்.

● நீதித்துறை நியமனங்களில் தங்கள் சமூகத்தினருக்குச் சட்டப்படி உரிமையுள்ள பங்கினைப் பெற்றிராத பார்ப்பனரல்லாத சமூகத்தினருக்கு அந்தக் குறையைப் போக்குவதற்குத் தேவையான விரைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

● சில குறிப்பிட்ட அமைப்புகள் விரும்புகிறபடி, பொதுப்பணிக்கு நேரடி நியமனம் செய்யப்படுவதற்காகத் திறந்த போட்டித் தேர்வுகள் நடத்துவது என்பதற்குப் பதிலாக, நியமனம் செய்யப்படவுள்ள பணியிடங்களை, முதலில் பல்வேறுபட்ட சமூகங்களுக்கு மக்கள்தொகைக்கு ஏற்ப பகிர்ந்து அளிக்கப்படுவதுடன், அச்சமூகங்களில் உள்ள மிகச் சிறந்த பணியாளரைத் தேர்ந்தெடுக்க, அச்சமூகத்தின் பணியாளர்களுக்குள்ளேயே நடத்தப்படும் தேர்வின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.


இந்தத் தீர்மானங்கள் மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தத்திலும் அதற்குப் பிறகு அமைந்த நீதிக்கட்சி ஆட்சியிலும் நன்கு உணரப்பட்டன. பல தீர்மானங்கள் செயலுக்கும் வந்தன. சென்னை மாகாணச் சட்டமன்றத் தொகுதிகளைப் பிரித்தளித்த இத்தீர்மானம் ‘பிக்காவோல் திட்டம்’ என்று அழைக்கப்பட்டது. பின்னர் வந்த மாநாடுகளிலும், அரசுக்கு அளித்த அறிக்கைகளும், கோரிக்கைகளும் பிக்காவோல் திட்டத்தின் அடிப்படையில் அமைந்தன என்பது இத்திட்டத்தின் முக்கியத்துவத்தைப் பறைசாற்றும்.

3.11.1917 மற்றும் 4.11.1917 ஆகிய இருநாட்களில் இன்றைய ஆந்திர மாநிலத்தின் கடப்பா அருகில் உள்ள புலிவேந்திராவில் அடுத்த மாநாடு நடைபெற்றது.

இம்மாநாட்டிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை முன்வைத்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதற்கடுத்த மாநாடு தெலுங்குத் தலைவர்களின் மாநாடாக 11.11.1917, 12.11.1917 ஆகிய இருநாட்களில் விஜயவாடாவில் நடைபெற்றது. சி.நடேசனார், பனகல் அரசர் ராமராய நிங்கார், ஏ.பி.பாத்ரோ, எத்திராஜ் முதலியார் உள்ளிட்டோர் கலந்துகொண்ட இம்மாநாட்டிற்கு தியாகராயர் தலைமையேற்றார்.

...குரல் ஒலிக்கும்

## ‘நாலு தெருக் கத’!




சமூக நீதிப் போராட்டத்தின் மிக முக்கிய முன்னெடுப்பு ‘வைக்கம் போராட்டம்’. அதன் நூற்றாண்டில் இருக்கிறோம், இப்போது! கோயிலுக்குள் அல்ல, கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களுக்கு உள்ளேயே ஒடுக்கப்பட்ட மக்கள் நுழையக்கூடாது என்ற மாபெரும் சமூக அநீதியை எதிர்த்து, நடைபெற்ற இப்போராட்டமும், அதில் தந்தை பெரியாரின் பங்கும் வரலாற்று நூலாக, ஆய்வுக்கட்டுரைகளாக எனப் பல வடிவில் ஏற்கெனவே வெளிவந்துள்ளன.

இவையெல்லாம் கட்டுரை நூல்களாக இருக்க, புதிய முயற்சியாக நாவல் வடிவத்தில் வைக்கம் போராட்ட வரலாற்றைத் தந்திருக்கிறார் திராவிடர் கழக மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் கி.தளபதிராஜ். ‘நாலு தெருக் கத’ என்ற தலைப்பே கதையின் கருவுக்குப் பொருத்தமாக அமைந்திருக்கிறது.

பெரியாரிய வழியைப் பின்பற்றி, சீர்திருத்தத் திருமணம் செய்துகொண்டு, தம்மைச் சூழ்ந்திருப்போருக்கும் ஜாதி மறுப்புத் திருமணம் செய்துவைக்கும் ஓர் சமூக அக்கறைகொண்ட இளைஞரின் கதையின் ஊடாக, வைக்கம் போராட்ட வரலாற்றையும் சுவைபடச் சொல்லியிருக்கிறார் நூலின் ஆசிரியர்.


வைக்கம் சிவன் கோயில், வைக்கம் சத்தியாகிரக ஆசிரமம், பெரியார் சிறைப்படுத்தப்பட்டிருந்த ஆறுக்குட்டி ஊர், வைக்கம் காவல் நிலையம் உள்ளிட்ட இடங்களை நேரில் பார்வையிட்டு வந்து, எழுதியிருப்பதும் நாவலுக்கு வலு சேர்க்கிறது. புனைவாக எழுதப்பட்டிருப்பதால், வரலாற்றை வாசிக்கிறோம் என்ற சுமை தெரியாத வகையில், வாசகர்களுக்கு ஓர் சுவையான அனுபவமாக இருக்கும்.

‘திராவிடன் குரல்’ வெளியீடாக வந்துள்ள இந்நூலைப் பெற 94434-93766, 99404- 89230 என்ற எண்களுக்குத் தொடர்பு கொள்ளலாம்.

## :ப்ளாஷ்பேக்



### தலைவரிடம் பெற்ற மணவாழ்த்து!


‘ஐ.சி.எஃப் ஜீவா’

1992-ஆம் ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றது. அதே ஆண்டில் என் மனைவியின் தம்பிக்கும் திருமணம் நடைபெற்றது. இதையடுத்து இரண்டு குடும்பத்தினரும் முத்தமிழறிஞர் கழகத் தலைவர் அவர்களிடம் வாழ்த்துப் பெறுவதற்காகச் சென்றிருந்தோம்.எனது மாமனார் திருச்சி மணமேடு பிச்சை, கழகத்தின் தீவிர தொண்டர். ‘நெஞ்சுக்கு நீதி’யிலேயே என் மாமனார் பெயரை தலைவர் குறிப்பிட்டு இருப்பார். நான் 1977-ஆம் ஆண்டில் இருந்து கட்சி பொறுப்புகளில் இருக்கிறேன். எங்கள் இரண்டு குடும்பமும் தலைவரைச் சந்தித்து வாழ்த்துப் பெற்றது மறக்க முடியாத நிகழ்வு.

**– ‘ஐ.சி.எஃப் ஜீவா’ என்கிற சிவசாமி, மாவட்டத் துணை அமைப்பாளர், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி, சென்னை**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### பாகப் பிரிவினைக்குப் பின், என்ன வேலை?

1953-ஆம் ஆண்டு பிப்ரவரி ஒன்றாம் தேதி, மொழிவாரி மாநிலப் பிரிவினையின்போது ‘சென்னையை ஆந்திராவுக்குத் தர வேண்டும்’ என்ற கோரிக்கையை எதிர்த்து, தமிழ் முஸ்லிம்கள் சார்பில் சென்னை கடற்கரையில் அனைத்துக் கட்சிக்கூட்டம் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் பேசிய பெரியார் “சுயநலக்காரர்களோடு சண்டை போட்டுக் கொண்டிருப்பதைவிட, வெளியே அனுப்பிவிடுவது நல்லது. எப்போது போகிறோம், என்று போகிறார்களோ, அவர்களுக்கு இங்கு என்ன வேலை? ஒரு வீட்டில் பாகப்பிரிவினை எல்லாம் செய்யப்பட்ட பிறகு, சமையல் மட்டும் கொஞ்ச நாளைக்கு இங்கே செய்துகொள்கிறேன் என்பது என்ன நியாயம்?” என்று கண்டித்துப் பேசினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

700

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.